மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கொடைக்கானலிலே ஜெர்ஸி பண்ணை நிறுவுவதற்காக நியூஜிலாந்து அரசாங்கம் இன்னும் எந்தவிதமான உதவியையும் செய்யவில்லை. ஆனால் இந்திய-நியூஜிலாந்து ஒப்பந்தத்தின்படி அந்தப் பண்ணையை நிறுவுவதற்காக ஆய்வுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. நியூஜிலாந்து வல்லுநர்கள் குழு ஒன்று வந்து சமீபத்தில் கொடைக்கானலில் இடத்தைப் பார்வையிட்டுச் சென்று இருக்கிறார்கள். இன்னும் அந்தத் திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை. அதுபோல் தருமபுரி மாவட்டத்திலும் ஓசூரில் இங்கிலாந்து நாட்டின் உதவியோடு ஒரு பண்ணையை நிறுவுவதற்கு இருக்கிறோம். அந்தத் திட்டம் அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கோவில்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின்சாரம் ஒழுங்காக வினியோகிக்காததும் அதன் விளைவுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. அழகர்சாமி அவர்கள், "திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டாரத்தில் கடந்த ஒரு வார காலமாக பம்ப் செட்டுகளுக்கு பிற்பகல் மட்டும் விடப்படும் மின்சாரம்கூட இடையிடையே பல தடவைகள் நிறுத்தப்பட்டு மின் சப்ளை விடுவதால் கிணற்றுப் பாசனத்திற்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் போய் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள நெல், பருத்தி, சோளம், மிளகாய், வாழை போன்ற பயிர்கள் தீய்ந்து, கிணற்றுப் பாசன விவசாயிகள் மிகப் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் நிலையைப் போக்கி, சீரான மின்சார வினியோகத்திற்கு அரசு எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைபற்றி விவாதிக்க" என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எந்த வகையில்

சபையின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய ஒரு அவசரமான விஷயம் என்பதைச் சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, சமீபகாலத்தில் 4–5 திங்களுக்கு முன்னால், நமது அரசு தலைமை செயலாளர் 15 சதவிகித வெட்டுக்கு மேல் மின்சார வெட்டு வராது என்று கூறி யிருக்கிறார்கள். சமீபத்தில் கோவில்பட்டி வட்டாரத்திற்குச் சென்று வந்தபோது அங்கே சொன்னார்கள். மாலை நேரத்தில் மட்டும்தான் மின்சாரம் வழங்கப்படுகிறது. அதுவும் கூட மாலை நேரங்களில் 12 மணிக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னால் 12½ மணிக்குத்தான் வருகிறது. பிறகு 1 மணிக்கு நின்று விடுகிறது. 1½ மணிக்குத்தான் வருகிறது.

இப்படி இடையிடையே நின்று விடுவதால் ஒரு நாளைக்கு 2 பாத்தி கூட பாய்ச்ச முடிவதில்லை. நான் அங்கு சமீபத்தில் சென்று இருந்தேன், 10 தினங்களாக இந்த மாதிரி இருக்கிறது என்று சொன்னார்கள். இதனால் அந்தப் பகுதியில் பயிராக்கப் பட்டிருக்கும் பருத்தி, நெல், சோளம் போன்ற பயிர்கள் தீய்ந்து ஏகபட்ட நஷ்டமாயிருக்கிறது. அது சம்பந்தமாக அதிகாரிகளைக் கேட்கிறபோது எங்களுக்கு முறையாக எப்படி மின்சாரம் வருகிறது என்று சொல்ல முடியாது. அது மேலிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டியது என்று சொல்லிவிடுகிறார்கள். மின்சாரம் வழங்கக்கூடிய முறையானது ஒரு ஏரியாவிற்கு இந்த நேரத்திலிருந்து இந்த நேரம் என்று பிரித்து விடலாம், அல்லது இவ்வளவுதான் இருக்கிறது என்று கணக்கிட்டு 3–4 மணி நேரம் தான் வரும் என்று சொல்லலாம். அப்படியில்லாமல் இப்படி இடையிடையே விட்டு விட்டு மின்சாரம் சப்ளை செய்வது அந்த விவசாயிகளை மிகவும் பாதிக்கிறது. 15 சதவிகிதம் மின்சார வெட்டிற்கு மேல் வராது என்று சொன்னதால் அவர்கள் வேறு ஆயில் இன்ஜின் போன்றவற்றை வாங்கி பாசன வசதியை செய்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

ஆகவே, எந்த முறையில் இருக்கிற மின்சாரத்தை ஒழுங்கான முறையில் விவசாயிகளுக்கு வழங்கலாம் என்பதைப்பற்றி விவாதிக்கவும், தேவையான முறையில் ஏற்பாடு செய்தால்தான்

அங்கே இருக்கக்கூடிய மானாவாரிப் பயிர்களை கிணற்றுப் பாசனத்தை நம்பி இருக்கும் பயிர்களைப் பிழைக்க வைக்க முடியும் என்பதை எடுத்துச் சொல்லவும், இது ஒரு முக்கியமான பிரச்னை என்பதாலும், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதுகுறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, பொதுவாக மின்சார விநியோகத்தைப் பொறுத்த அளவிலே வேளாண்மை விசையேற்றங்களுக்கு காலையில் 6 மணியிலிருந்து 12 மணி வரையிலும் ஒரு பகுதிக்கும், 12 மணியிலிருந்து மாலை 6 மணி வரையிலும் ஒரு பகுதிக்கும் பிரிக்கப்பட்டிருக்கிறது. அது அல்லாமல் விசையேற்றங்களுக்கு இரவு 10 மணியிலிருந்து காலை 6 மணி வரையிலும் எல்லோராலும் விவசாயத்திற்கு மின்சாரத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கும் சரி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு நாளைக்குக் குறைந்தது 6 மணி நேரம் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்படவேண்டும் என்று பிரிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், விவசாயிகளைப் பொறுத்தவரையில் மின்சார வெட்டு எதுவுமில்லாமல் கொடுக்கப்படுகின்ற நேரத்தில் சில கட்டுப் பாடுகள் இருக்கின்றன. அதன் காரணமாக மின் சுமை அதிகமாக இருக்கிற நேரத்தில் அந்தக் கட்டுப்பாடு வைத்து மின் விநியோகம் செய்யாவிட்டால் பல இடங்களில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

உதாரணத்திற்குச் சொல்லப்போனால், கோடை காலமாக இருக்கிற காரணத்தால் மின் சுமை அதிகமாக இருக்கிறது. பாசனத்திற்கு உகந்த நீர் மின் நிலையங்களில் பாசனத்திற்குத் தண்ணீர் வராத காரணத்தினால் இப்பொழுது அவைகள் மூடப் பட்டிருக்கின்றன. அதன் காரணமாக சுமை அதிகமாக இருக்கிறபொழுது ஸ்டாகர் செய்யவேண்டியிருக்கிறது. சில வேளைகளில் சில பகுதிகளில் மோட்டார் பம்புசெட் அதிகமாக இருக்கிற காரணத்தினால் கோடைக்காலத்தில் அதிகமாக மோட்டார் ஆரம்பிக்கப்படுகின்ற காரணத்தினால் சுமை அதிகமாக இருக்கிறபொழுது ஃப்ரீகுவென்ஸி குறைந்துவிடுகிறது.

1974 மார்ச் 20] [திரு. ஓ. பி. இராமன்]

ஃப்ரீகுவென்ஸி குறைந்துவிடுமானால் நெய்வேலியிலும் கேரள மாநிலத்திலுமுள்ள இணைப்புகளை உடனே துண்டித்துவிடுவார்கள். அப்படி துண்டிக்காவிட்டால், இயந்திரங்களில் பெரிய கோளாறுகள் ஏற்பட்டுவிடும்.

ஆகவே, கோவில்பட்டியைப் பொறுத்த அளவில் 8-ம் தேதியிலிருந்து 15-ம் தேதி வரையில் இடையே நாம் விசாரித்ததில் சில நேரங்களில் இடையூறு ஏற்பட்டு இருந்தது. 15-ம் தேதிக்குப் பின்னாலே அந்த நிலைமைகள் சரி செய்யப்பட்டிருக்கிறது. இடையிலே ஏற்பட்ட இடர்ப்பாடு கூட அதிகாரிகளுடைய கவனக் குறைவினால் ஏற்பட்டது அல்ல, தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கேரள அதிகாரிகள் மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டிய கட்டாயமான நிலை, ஸ்டாகர் செய்யவேண்டிய நிர்பந்தமான நிலை ஏற்பட்டது. இருந்தாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில், வாரியத்தைப் பொறுத்தவரையில் இருக்கிற மின்சாரத்தைப் பக்குவப்படுத்தி, விவசாயிகளுக்கு முக்கியமாகக் கொடுப்பது அத்தியாவசியம் என்று கருதி, அவர்களுக்கு விநியோகிக்கப் பட்டு வருகிறது. கடந்த காலங்களில் கூட விவசாயம் பாதிக்கப் படாத அளவுக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசு மிகவும் அக்கறை செலுத்தி வருகிறது.

திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள், ஏதோ 15 சதவிகிதம் வெட்டுக்கு மேல் வராது என்று சொன்னதாகச் சொன்னார்கள். அதன் காரணமாக விவசாயிகளெல்லாம் அதிகமாக நாற்றுகளை நட்டுவிட்டார்கள். இறவை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்த வாரியத்தின் சார்பில், அல்லது எந்த அதிகாரியின் சார்பிலும் எந்தக் காலத்திலும் இந்த கட் இருந்து கொண்டிருக்கும், மேலும் போகாது, குறையாது என்று யாரும் எப்பொழுதும் சொல்லவில்லை.

இதற்கென்று ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அந்தக் குழு ஒவ்வொரு மாதமும் உற்பத்தி நிலைமைகளைப் பரிசீலித்து எவ்வளவு உற்பத்தி இருக்கிறதோ, அதற்குத் தகுந்தவாறு சீரமைப்பு செய்கின்ற அறிவிப்பை வெளியிட்டு வருகிறது. இப்பொழுது இருக்கிற நிலைமைகளை மாதக் கடைசியில் ஆராய்ந்த பிறகுதான் நிலை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியும்.

ஆகவே, இம்மாதிரியான ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இந்தக் கோவில்பட்டிப் பகுதியைப் பொறுத்த அளவில் ஒரு மாத காலத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடு இப்பொழுது தவிர்க்கப்பட்டு, எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, சூழ்நிலை சீராக அமைந்திருக்கிற காரணத்தினால், மேலும் இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: ஏதாவது ஒரு 6 மணி நேரம் இடைவெளியில் நிற்காமல் முறையாகத் தொடர்ந்து மின்சாரம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: உத்திரவாதம் எதுவும் இதிலே கிடையாது. ஃப்ரீகுவென்ஸி குறையும்பொழுது, அதிகலோடு வருகிற பொழுது வேறு மாநிலங்களிலிருந்து மின்சார இணைப்பைத் துண்டித்து விடுவார்கள். நெய்வேலியில் துண்டிக்காவிட்டால் பெரிய இயந்திரங்கள் கெட்டுப் போய்விடும். ஆகவே, தவிர்க்க முடியாத காரணத்தினால், ஃப்ரீகுவென்ஸி குறைகின்ற காரணத்தினால் ஏற்படுகின்ற இடர்ப்பாடு இது. அதுவும் கோடை காலத்தில் சில சமயங்களில் இந்த மாதிரி இடையூறுகள் ஏற்படுகின்றன. அதைத் தடுக்கின்ற அளவுக்கு எந்த அளவுக்கு முஸ்தீபுகளைச் செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்து கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதை விவாதிக்க அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதினால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.